2016

2016 501538

No. of Printed Pages : 4

**5927**

Register Number

**Second Year**

# சமூக அறிவியல் கற்பித்தல்

# TEACHING OF SOCIAL SCIENCE

(Tamil Version)

நேரம் : 3 மணி

மொத்த மதிப்பெண்கள் : 100

**அறிவுரை :**

(1) அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப் பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாக தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

## பகுதி - அ

## பாடப் பொருள்

**I.** (அ) அனைத்து வினாக்களுக்கும் 100 வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

**10x2=20**

1. ''நீலப்புரட்சி'' என்றால் என்ன?
2. புதுப்பிக்கக் கூடிய வளங்கள் பற்றி சிறு குறிப்பு வரைக.
3. அலை நீளம் - வரையறு.
4. காற்று மாசுபடுதலை கட்டுப்படுத்த நாம் கையாள வேண்டிய வழிமுறைகள் யாவை?
5. வானிலை மற்றும் காலநிலை - வேறுபடுத்துக.
6. இந்தியாவில் எழுத்தறிவின்மைக்கு கூறப்படும் ஏதேனும் இரு காரணங்களை கூறுக.
7. வறுமையின் அளவீடுகள் யாவை?
8. 'பத்திரிக்கை சுதந்திரம்' - விளக்குக.
9. மழைநீரை எவ்வாறு சேமிப்பாய்?
10. உலக அமைதிபெற மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் யாவை?

[ Turn over

## கற்பிக்கும் முறை

(ஆ) அனைத்து வினாக்களுக்கும் 100 வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளி.

**10x2=20**

11. வாய்மொழித் தேர்வு - சிறு குறிப்பு வரைக.

12. நடித்தலின் படிநிலைகள் யாவை?

13. 'பணிமனை' - வரையறு.

14. உள்ளீட்டு மற்றும் வெளியீட்டு கருவிகள் என்றால் என்ன?

15. நாடகத்தில் நடிப்பதற்கு ஏற்ற பகுதிகள் யாவை?

16. பாடம் சாரா பகுதியினை மதிப்பீடு செய்ய எதனை அடிப்படையாகக் கொள்ள வேண்டும்?

17. அறிவியல் சிந்தனை தூண்டல் முறையை பற்றி ஜான்டூவின் கூற்று யாது?

18. "உண்மை கதைகள் சமூக அறிவியல் பாடத்தில் சிறந்த இடத்தைப் பெறுகின்றன" என்ற கூற்றை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

19. இணையம் மூலம் பெறக் கூடிய தகவல்கள் ஏதேனும் நான்கினை கூறுக.

20. பணிமனையில் "மாதிரிகள் செய்தல்" - சிறு குறிப்பு வரைக.

## பகுதி - ஆ
## பாடப்பொருள்

II. (அ) ஏதேனும் 5 வினாக்களுக்கு ஒவ்வொரு வினாவிற்கும் 200 வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

**5x4=20**

21. மண் வளத்தை எவ்வாறு பாதுகாக்கலாம்?

22. உயிர் கோளத்தின் மூன்று பகுதிகளை விவரி.

23. எரிசக்தி என்றால் என்ன? அதனால் ஏற்படும் நன்மைகள் யாவை?

24. மாறும் காற்றுகள் - விளக்குக.

25. எழுத்தறிவின்மையை போக்கும் வழிகளை விளக்கி எழுதுக.

26. கடல் நீரோட்டம் என்றால் என்ன? அதன் வகைகளை தகுந்த எடுத்துக்காட்டுடன் விளக்குக.

27. ''ஐ.நா.வும் உலக அமைதியும், இந்தியாவும் உலக அமைதியும்'' - ஒப்பிடுக.

28. ''வேளாண்மை, இந்திய பொருளாதார வளர்ச்சிக்கு முதுகெலும்பாக உள்ளது''- விவரி.

## கற்பிக்கும் முறை

(ஆ) ஏதேனும் **ஐந்து** வினாக்களுக்கு **200** வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளிக்கவும். **5x4=20**

29. பஞ்ச தந்திரக் கதைகள் தோன்றிய விதத்தினை விவரி.

30. இணைய வழிக் கற்பித்தலில் தேடுதல் மூலம் கிடைத்த தகவல்களை எவ்வாறு ஒரு ஆசிரியர் கற்பிக்கலாம்?

31. அறிவியல் சிந்தனை தூண்டல் முறையின் சிறப்பம்சங்கள் யாவை?

32. நாடக முறையில் நினைவிற் கொள்ள வேண்டியவற்றை வரிசைப்படுத்துக.

33. பள்ளியில் ''திறன் அடிப்படையிலான முழுமையான தொடர் மதிப்பீடு'' (CCE) பற்றி விவரி.

34. நாடகத்தின் வகைகள் யாவை?

35. சமூக அறிவியல் கற்றல் கற்பித்தலில் பணிமனையின் பயன்பாடு எவ்வாறு உள்ளது என்பதனை விளக்குக.

36. இணைய வழி கற்பித்தலின் படி நிலைகள் யாவை? ஏதேனும் இரண்டினை விளக்குக.

## பகுதி - இ

**III.** **இரண்டு** வினாக்களுக்கும் ஒவ்வொன்றிற்கும் **500** வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளி. **2x10=20**

**37.** (அ) அடைவுத் தேர்வு - கட்டுரை வரைக.

**அல்லது**

(ஆ) சமூக அறிவியலில் பாடப்பகுதிகளைக் கதைகள் மூலம் கற்பிப்பதன் சிறப்பு என்ன? எடுத்துக்காட்டுடன் விவரி.

**38.** (அ) பணிமனையின் மூலம் பொதுச் சொத்துக்களை பராமரிப்பதன் அவசியத்தை மாணவர்களிடையே எவ்வாறு வளர்ப்பாய்?

**அல்லது**

(ஆ) அறிவியல் சிந்தனை தூண்டல் முறையின் படிநிலைகளை ஆறாம் வகுப்பு புவியியல் பாடப் பகுதியில் ஏதேனும் ஒரு பாடத்தினை எடுத்துக் கொண்டு விளக்குக.

- o 0 o -